உடுக்குறியிட்ட வினாக்கள்.

விண்ணப்ப முத்திரை வில்லை ஒட்டுதல்.

0 2005.—திரு. வே. பெரியசாமி :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சாதியினரும் ஒரு ரூபாய் விண்ணப்ப முத்திரை வில்லை ஒட்டாமலே சாதிச்சான்று, பிற அனைத்துச் சான்றுகளும் வாங்க அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டிலுள்ள அனைத்து சாதியினரும், விண்ணப்ப முத்திரை வில்லை ஒட்டாமலேயே சாதிச் சான்றும், இருப்பிடச் சான்றும் வாங்குவதற்கு அரசு ஏற்கெனவே ஆணை பிறப்பித்துள்ளது. ஆனால் பிற அனைத்துச் சான்றுகளுக்கும் இச்சலுகை கிடையாது.

1971 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட குடியிருப்புச் சட்டம்.

7741. திரு. மா. மணிமாறன் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்ச7 கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1971 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட குடியிருப்புச் சட்டத்தின் பலன் இன்றும் ஏழைகளுக்குப் பயனளிக்காமல் உள்ளதற்கான காரணங்களைப் பரிசீலிக்க அரசுக்கு வேண்டுகோள் வரப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசின் நிலை என் ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரசுக்குத் இது சம்பந்தமாக வந்த முறையீடுகள் பரிசீலிக்கப்பட்டது. தமிழ்நாடு குடியிருப்பு அனுபோகதாரர்கள் சட்டம் (உடைமை உரிமை அளித்தல்) 1971, (தமிழ்நாடு சட்டம் 40!71)-ன் படி 19—6—1971 அன்று குத்தகை தாரர் அல்லது உரிமைதாரர் என்ற முறையில் குடியிருப்பு மனையை அனுபோகத்தில் வைத்திருந்த உழவர் அல்லது உழவுத் தொழிலாளர் ஒருவர் இச்சட்டம் செயலுக்கு வந்த நாளிலிருந்து உரிமையாளராக இருப்பார். மேலும் இச்சலுகையை நீட்டித்து சட்டத்திருத்த முன் வடிவு கொண்டு வருவது பற்றிய கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1971-ஆம் ஆண்டு குடியிருப்பு உரிமை வழங்கல் சட்டத்தின் கீழ், உரிய பாதுகாப்பு விள்க்க சட்டத் திருத்தம் கொண்டு வர இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். அப்படிக் கொண்டு வரும்போது, முன்னால் உள்ள சட்டத்தில், கோயில் நிலங்களிலே அல்லது மற்ற அறக்கட்டளை நிலங்களிலே குடியிருப்பவர்களுக்கு அது பொருந்தாது என்று இருக்கிறது. அரசுக்குச் சொந்தமான அல்லது தனியாருக்குச் சொந்தமான இடங்களிலே இருப்பவர்களுக்கு மட்டும்தான், அந்தச் சட்டப்படி பயன்பெற முடியும் என்ற நிலை இருக்கிறது— எனவே, குடியிருக்க மனை இல்லாமல், எந்த இடத்திலே அவர்கள் இருந்தாலும், அவர்கள் அனைவருக்கும் அது பொருந்தக்கூடிய முறையிலே ஒரு சட்டத் திருத்தத்தை அரசு கொண்டுவர முயற்சிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டத் திருத்தம் கொண்டு வருவது தொடர்பாக, சட்ட மன்ற உறுப்பினர் திரு. மணிமாறன் அவர்களிடமிருந்து வேண்டுகோள் வந்துள்ளது. இந்தக் கருத்து அரசால் பரிசீலிக்கப்பட்டு, சட்டத்தின் கீழ் மேலும் சலுகை நீட்டித்து, 30—6—1955 அன்று குடியிருப்புகளை அனுபோகத்தில் வைத்துள்ள நபர்களுக்கு உடைமை உரிமை வழங்க ஒரு சட்ட முன்வடிவு கொண்டு வரவும் அரசு உத்தேசித்திருக்கிறது. இச்சலுகை நீட்டிப்பு, தமிழ்நாடு கிராம கைவினைஞர்கள் குடியிருப்பு அனுபோக

உரிமை வழங்கல் சட்டம் 1976-க்கும் கொண்டு வர, அரசு உத்தேசித்துள்ளது. திரு. வீரையன் அவர்கள் கேட்ட கேள்விக்கு என்னிடம் இப்போது பதில் இல்லை. தனிக் கேள்வி போட, கேட்டுக் கொள்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1971-ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே, களம் புறம்போக்கு, மேய்ச்சல் புறம்போக்கு, குளம் புறம்போக்கு, தோப்புப் புறம்போக்கு போன்ற இடங்களில் பல ஏழை விவசாயிகள் குடியிருந்து வருகிறார்கள். அந்தக் கிராமத்திலே உள்ளவர்கள் ஆட்சேபணை இல்லை என்று முறையீடு செய்வார்களேயானால், அந்த இடங்களை ஏழைகளுக்கு மனைப்பட்டா வழங்குவதற்கும், அப்படிப்பட்ட இடங்களைக் குடியிருப்பு நத்தம் புறம்போக்காக மாற்றுவதற்கும் அரசு ஆவன செய்யுமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

9-05 மணி

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர்களே, புதிதாக வரவிருக்கிற சட்டத்தில் குறிப்பிட்ட இந்தப் பிரச்சினைகள் அனைத்தும் ஆராய்வதற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

போகுவரத்துத்துறை ஊழியர்களுக்குச் சமுகப் பாதுகாப்புத் திட்டம்.

6414.—. திரு. எஸ். டி. உகம்சந்த் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) போக்குவரத்துத்துறை ஊழியர்களுக்குச் சமூகப் பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) (1) சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பணியிலிருக்கும் பொழுது இறக்க நேரிடும் தொழிலாளரின் குடும்பத்தாரும், ஒய்வுபெறும் தொழிலாளர்களும் பயன் பெறுவார்கள்.